

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நாகர்கோவில் அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரியில் 2016-17-ஆம் ஆண்டிற்கான இளநிலை பட்ட வகுப்புகளில் முதலாம் ஆண்டு மாணவர்கள் சேர்க்கைக்கான விண்ணப்ப படிவங்களை வடசேரி, நெசவாளர் தெரு, அரசு உயர்நிலைப்பள்ளியில் இன்று (30.05.2016) வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலவர் திரு. வெ.ஜெயக்குமார், கல்லூரி கல்வி இணை இயக்குநர் முனைவர். ஆர். பாண்டியன், கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை சங்கத்தலைவர் திரு. ச. சகாயராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

செ.வெ.எண்: 306/2016 நாள்: 30.05.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், இளநிலை பட்ட வகுப்புகளில் முதலாம் ஆண்டு மாணவர்கள் சேர்க்கைக்கான விண்ணப்ப படிவங்களை இன்று (30.05.2016) வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாணவ, மாணவியர்களின் கல்வியை உயர செய்வதற்காக பள்ளி கல்வித்துறை மற்றும் உயர் கல்வித்துறை சார்பாக, பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி வருகிறார்கள். மேலும் நமது மாவட்டத்திலிருந்து மாணவ, மாணவியர்கள் திருநெல்வேலி, தூத்துக்குடி போன்ற மாவட்டத்திற்கு சென்று உயர்கல்வி கற்கும் நிலை இருந்து வந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இதனை கருத்தில்கொண்டும், மாணவ, மாணவியர்களின் பயணம் சிரமத்தை போக்கிடும்வகையிலும் நாகர்கோவிலில் அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரி தொடங்குவதற்கான கட்டிட பணிகள் கோணம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்று வருகிறது. மேலும் மாணவ, மாணவியர்களின் கல்விக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படாதவகையில் தற்காலிகமாக நெசவாளர் தெருவில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரி நடத்திட அறிவுரைகள் வழங்கியுள்ளார்கள்.

அதனடிப்படையில் நாகர்கோவில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், 2016-17-ஆம் ஆண்டிற்கான இளநிலை பட்ட வகுப்புகளில் முதலாம் ஆண்டு மாணவர்கள் சேர்க்கைக்கான விண்ணப்ப படிவங்களை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், வடசேரி, நெசவாளர் தெரு, அரசு உயர்நிலைப்பள்ளியில் இன்று (30.05.2016) வழங்கி, வழங்கும் பணிகளை துவக்கி வைத்து, மாணவர்களுக்கு கல்வி கற்க வகுப்பறைகளில் அடிப்படை வசதிகள் உள்ளதா என்பதை ஆய்வு செய்தார்.

இக்கல்வியாண்டில் இளங்கலை பொருளியல் (B.A. Economics), இளங்கலை ஆங்கிலம் (B.A English) மற்றும் இளங்கலை வணிகவியல் (B.Com) ஆகிய 3 பாடப்பிரிவுகளுக்கான மாணவ, மாணவியர் சேர்க்கைகள் நடைபெறவுள்ளது. விண்ணப்பங்கள் இன்று முதல் காலை 10.30 மணி முதல் 3.30 வரை வழங்கப்படும். ஒரு விண்ணப்பத்திற்கு ரூ.27/- வசூலிக்கப்படும். (விண்ணப்பப்படிவம் ரூ.25/-ம், பதிவுக்கட்டணம் ரூ.2/-ம்). தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தை சார்ந்தவர்களுக்கு விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக்கட்டணம் கிடையாது. இவர்கள் சாதிச்சான்றிதழ் நகலை சமர்ப்பித்து விண்ணப்பம் பெற்றுக்கொள்ளலாம். மேலும் விண்ணப்பங்கள் 10.06.2016 அன்று பிற்பகல் 2 மணி வரை வழங்கிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலவர் திரு. வெ.ஜெயக்குமார், கல்லூரி கல்வி இணை இயக்குநர் முனைவர். ஆர். பாண்டியன், கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை சங்கத்தலைவர் திரு. ச. சகாயராஜ், உதவி இயக்குநர் திரு. வி. ராமசுப்பிரமணியன், திரு. ஷாஹூல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.